Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 259 | வெள்ளிக்கிழமை 12 ஒகஸ்ட் 2022 | ஆடி 27ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 | விலை: 50/=



## தாய்லாந்தில் கோத்தாபய!

கொழும்பு, ஓக. 12
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தாய்லாந்தை ,அந்நாட்டு நேரப்படி இரவு 8 மணியளவில் வந்தடைந்துள்ளாரென அந் நாட்டு அதிகாரிகள் உறுதி செய் துள்ளனர்.
தாய்லாந்தில் தற்காலிகமாக தங்கியிருப்பதற்காகவே கோத்தா பய, பாங்கொக் நகரை நேற்று வந்தடைந்தார் என்று தாய்லாந்து அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

11 ➤

# இராஜதந்திரச் சமர்க்களத்தில் இந்தியாவின் கை ஓங்குகிறது?



### திட்டமிட்டவாறு சீனாவின் உளவுக் கப்பலால் அம்பாந்தோட்டையை நேற்று நெருங்க முடியவில்லை

கொழும்பு, ஒகஸ்ட் 12

பெரும் இராஜதந்திரச் சிக்கலை இலங்கைக்கு ஏற்படுத்தியுள்ள சீனாவின் உளவுக் கப்பலான 'யுவான் வாங் 5' நேற்றைய தினம் திட்டமிட்டவாறு அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடையவில்லை.

11 ➤

## வந்து சேர்ந்தது பெற்றோல் கப்பல்

கொழும்பு, ஓக. 12
35 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோலுடனான கப்பலொன்று கொழும்பை நேற்றிரவு வந்தடைந் துள்ளது. இலங்கை மத்திய வங்கி யின் பங்களிப்புடன் பெற் றோலுக்கான கொடுப்

11 ➤

## வடக்கே வருகிறார் அமைச்சர் சுசில்



யாழ்ப்பாணம், ஓக. 12
கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று . அடுத்த வாரம் கிளிநொச்சி மற்றும் யாழ்ப் பாண மாவட் டங்களுக்கு உத்தியோகபூர்வ பய ணத்தை மேற்கொள்ளவுள்ளது.
கல்வி அமைச்சின் செயலர் எம்.என். ரணசிங்க மற்றும் பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மூத்த பேராசிரியர் சம்பத் அமரதுங்க ஆகியோரு

11 ➤

(படம் ஐ.சிவசாந்தன்)



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழாவின் 10ஆம் நாளான நேற்று மஞ்சத் திருவிழா நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

மேலும் படங்கள் பக். 12இல்




## நல்லைக்குமரன் வெளியீடும் 'யாழ்' விருது வழங்கலும் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 12
யாழ்ப்பாண மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவினரால் நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் 'நல்லைக் குமரன் மலர்' வெளியீட்டு விழா நாவலர் மண்டபத்தில் இன்று நடைபெறவுள்ளது. அதனுடன் இணைந்ததாக 'யாழ்' விருதும் வழங்கி வைக்கப் படவுள்ளது.
யாழ்ப்பாண மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவினரால் சைவத்துக்கும் தமிழுக்கும் சமூகத்துக்கும் தொண்டாற்றியவர்களைக் கௌரவித்து 'யாழ் விருது' வருடா வருடம் வழங்கப்பட்டு வருகின்றது.

11 ➤

## மூன்று விடயங்கள் முக்கியமானவை!

### ஐரோப்பிய ஒன்றியம் ரணிலுக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஓக. 12
மூன்று முக்கியமான விட யங்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஐரோப்பிய ஒன்றியம் அறிவு றுத்தியுள்ளது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை, சர்வ தேச நாணய நிதியம் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வு தொடர்பான விடயங்களே அந்த மூன்று விடயங்களும் என நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதியை சந்தித்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.
மேற்குறிப்பிட்ட

11 ➤

## இலங்கைக்கு அள்ளிக் கொடுக்கும் அவுஸ்திரேலிய வீரர்கள்

கொழும்பு, ஓக. 12
அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி வீரர்களான ஆரோன் பின்ச் மற்றும் பட் கம்மின்ஸ் ஆகியோர் இலங்கையிலுள்ள சிறுவர்கள் மற்றும் அவர்களது

11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்பின் 22ஆம் திருத்தம் முழுமையாக நடைமுறைக்கு வரும்!

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 12**
**அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல விடயங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண இணைந்து செயற்படுவதற்கான அழைப்பை நாம் மீண்டும் எதிர்க்கட்சிகளுக்கு விடுகின்றோம். சர்வகட்சி அரசாங்கம், பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு, அரசமைப்புத் திருத்தம் என அனைத்து முக்கியமான விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளது.

அதுதொடர்பில் அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

அத்துடன் நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்களை பலப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதுதொடர்பில் நிலையியற் கட்டளையில் மாற்றம் கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாம் எதிர்காலம் தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. குறிப்பாக நாட்டின் பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கான வேலைத்திட்டங்கள் அவசியமாகும். அதற்கான நீண்டகாலத் தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. 22ஆவது அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எமது அரசாங்கம் வெறும் பேச்சில் மட்டுமல்ல செயலிலும் அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கும் என்பதை உறுதியுடன் தெரிவிக்கின்றேன் - என்றார். (ம)

# முழு நாடாளுமன்றமும் அரசமைப்புப் பேரவை!

## அமைச்சர் நிமாலின் விருப்பம் இது இணைந்து செயற்படவும் அழைப்பு



கொழும்பு, ஓக. 12
முழு நாடாளுமன்றமும் அரசமைப்புப் பேரவையாக மாற்றப்பட்டு, அனைத்து நெருக்கடிகளுக்கும் தீர்வுகாணும் வகையில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்று தெரிவித்தார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.

அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

முழு நாடாளுமன்றமும் அரசமைப்புப் பேரவையாக மாற்றப்பட்டு அனைத்து நெருக்கடிகளுக்கும் தீர்வுகாணும் வகையில் அனைவரும் இணைந்து செயற்படுவது அவசியம். அரசாங்கத்தில் தவறுகள் இருப்பின் அவை சுட்டிக்காட்டப்பட்டு அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டிய தருணம் இது. அதற்காகவே சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிய எரிபொருள், சமையல் எரிவாயு, உரம் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு வருகிறது.

அடுத்ததாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டு வாழ்க்கைச்செலவு குறைக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த வருடம் முதல் எமது ஏற்றுமதி வருமானம் அதிகரித்து வருகிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியின் காலை வாருவதை விடுத்து அரசாங்கத்தை பலப்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்- - என்றார். (ம)

# மாகாண அபிவிருத்தி: ஆளுநர்கள் முகாமை

## ஜனாதிபதி உத்தரவு



கொழும்பு, ஓக. 12
மாகாண நிர்வாகம், அபிவிருத்தி செயற்பாடுகளை கிரமமான முறையில் முகாமைத்துவம் செய்தல் மற்றும் செலவினங்களை முகாமைத்துவம் செய்தல் போன்ற பொறுப்புக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாகாண அபிவிருத்திச் செயற்பாடுகள் கிரமமான முறையில் முகாமைத்துவம் செய்யப்படுதல் வேண்டும்.

அதற்கு ஆளுநர்கள் மற்றும் மாகாணத்திலுள்ள சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து செயற்படவேண்டும். இதுதொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஆளுநர்களுக்கு வழங்கப்பட்ட ஆலோசனைகள் சகல மாகாண ஆளுநர்களுக்கும் எழுத்துமூலம் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க அறியத்தருவார் - என்றுள்ளது. (ச-இ)

# ஆசியாவின் வர்த்தக சந்தையாக இலங்கை மாற்றம் பெறவேண்டும்

## நாடாளுமன்றத்தில் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 12
ஆசியாவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அபிவிருத்தி தொடர்பில் பிரிட்டன் கவனம் செலுத்தியுள்ளதாக அண்மையில் தெரிவிக்கப்பட்டது. அந்தவகையில் மிகப்பெரும் வர்த்தக சந்தையாக இலங்கை முன்னேற்றப்படவேண்டும். அதற்காக எமது நட்பு நாடுகளுடன் இணைந்து செயற்பாடுகளை மேற்கொள்வது அவசியமாகும் என்று தெரிவித்தார் பிரதமர் தினேஷ் குணவர்த்தன.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கருத்துத் தெரிவிக்கையில், அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் சனத்தொகை 25 மில்லியனை நோக்கி அதிகரித்து வருகின்றது. புதிய சனத்தொகை அதிகரிப்புக்கிணங்க கேள்விகளும் அதிகரித்து வருகின்றன. அதற்கான சேவை வழங்கலும் அதிகரிக்கின்றது. நாட்டின் சனத்தொகை அதிகரித்தாலும் அதற்கேற்ற முறையில் பூமியின் அளவும் நீர் வளமும் அதிகரிக்காது. இத்தகைய புதிய பிரச்சினைகள் தொடர்பில் கடந்த யுகத்தைவிட அடுத்து வரும் யுகம் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. மேலும் புதிய போக்குவரத்துக் கொள்கையின் அவசியம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதுவரை தேசிய போக்குவரத்துக் கொள்கை என்று நடைமுறைப்படுத்தப்படவில்லை. அத்துடன் வீண்விரயங்கள் தொடர்பான நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்வது தொடர்பில் ஜனாதிபதி அதிக கவனம் செலுத்தியுள்ளார்.

நாட்டிலுள்ள 14 ஆயிரத்து 500 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் புதிய அபிவிருத்தித் திட்டங்கள், உணவு உற்பத்தி மற்றும் சுற்றாடல் அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மீன்பிடித் துறைகளும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன - என்றார். (ம)

# ரஞ்சனுக்கு மன்னிப்பு

## விஜயதாஸ ராஜபக்ச வலியுறுத்து

கொழும்பு, ஓக. 12
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை, பொது மன்னிப்பின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுதலை செய்ய வேண்டும் என அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச கோரியுள்ளார். சிறைத்தண்டனையின்போது ரஞ்சன் ராமநாயக்கவின் நன்னடத்தையில் திருப்தி வெளியிடப்பட்டுள்ளது. இதுதொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமும் தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். எனவே ரஞ்சன் ராமநாயக்க, கணிசமான வருடங்கள் சிறைத்தண்டனையில் இருப்பதால் அவருக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்படுவது தொடர்பில் பரிசீலிக்கப்பட வேண்டும் என்று நீதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-14)

## சர்வகட்சி அரசாங்கம்

# ஜே.வி.பியின் புறக்கணிப்பால் ஜனாதிபதிக்குக் கவலையாம்

சர்வகட்சி அரசாங்கமொன்றை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொள்வதில்லை என்ற ஜே.வி.பியின் தீர்மானம் கவலைக்குரியது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பாக ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் கலந்துகொள்வதற்கு ஜே.வி.பிக்கு நேற்று முன்தினம் வரை நேரம் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் குறித்த கலந்துரையாடலில் தாங்கள் கலந்துகொள்ளப் போவதில்லை என்றும், சர்வகட்சி அரசாங்கத்தில் எந்த வகையிலும் இணைந்துகொள்ளப் போவதில்லை என்றும் ஜே.வி.பி கடந்த 9ஆம் திகதி ஜனாதிபதிக்குக் கடிதம் மூலம் அறிவித்திருந்தது.

அதற்குப் பதிலளிக்கும் வகையில், ஜனாதிபதித் தரப்பிலிருந்து ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுக்கு நேற்று முன்தினம் மாலை பதில் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கடிதத்தில், கலந்துரையாடலில் கலந்துகொள்வதில்லை என்ற ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமாரவின் தீர்மானம் குறித்து கவலையை வெளிப்படுத்துகின்றேன். அத்துடன் சர்வகட்சி அர சாங்கம் தொடர்பில் ஜே.வி.பி தனது ஒத்துழைப்பை வழங்கும் என்று நான் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றேன் என்று தெரிவித்துள்ளார். (ம-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவை எதிர்கொள்ள இலங்கை பல்வேறு வியூகம்

## நீதி அமைச்சர் தலைமையில் சிறப்புக் கலந்துரையாடல்கள்

கொழும்பு, ஓக. 12

**ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்காக, இலங்கை பல்வேறு நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாக நீதி அமைச்சர் விஜயதாஸ தலைமையில் நேற்றுமுன்தினம் சிறப்புக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.**

இந்தக் கலந்துரையாடலில், இலங்கையின் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்புத் தொடர்பில் செயற்படுகின்ற உள்நாட்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயப்பட்டது.

மனித உரிமைகளைப் பாதுகாத்தல், நல்லிணக்கத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மறுசீரமைப்பு என்பவற்றுக்குரிய நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் இந்தக் கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்டன.

அத்தோடு எதிர்காலத்தில் இந்த நிறுவனங்கள் செயற்பட வேண்டிய முறைமை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது. ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரை எதிர்கொள்வதற்காக, அதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து பொறிமுறையொன்றை தயாரிப்பது தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு பல்வேறு கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளை முன்வைத்துள்ளார். (ம)

# நிறைவேற்றதிகாரத்தை முற்றிலும் ஒழியுங்கள்!

## ஜூரிகள் ஆணைக்குழு வலியுறுத்து

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் நிறைவேற்று அதிகாரங்களை இல்லாதொழிப்பதற்கு ஏதுவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு இலங்கைக்கு வலியுறுத்தியுள்ளது.

22 ஆவது திருத்தவரைவு நாடாளுமன்றத்தில் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவால் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பில் வெளியிட்ட அறிக்கையிலேயே, மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்குக் காரணமாக அமைந்த முறையற்ற நிர்வாகம் மற்றும் குடும்ப ஆட்சி ஆகியவற்றுக்குரிய பொறுப்புக்கூறலையே இலங்கை மக்கள் வலியுறுத்தி வருகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 22 ஆவது திருத்தம், அரசமைப்பு ரீதியில் எதிர்பார்க்கப்பட்ட விடயங்களைப் பூர்த்தி செய்யும் வகையில் அமையவில்லை என்பதுடன் அது ஜனாதிபதி வசமுள்ள மிகையான அதிகாரங்களைக் குறைக்கவில்லை.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அத்துமீறிய அதிகாரங்கள் நீக்கப்படவேண்டும் என்று போராட்டக்காரர்கள் வலியுறுத்திய போதிலும், 22 ஆவது திருத்த வரைவின்படி ஜனாதிபதி இன்னமும் மிகையான அதிகாரங்களைத் தன்னகத்தே வைத்திருக்கின்றார்.

தற்போது நடைமுறையிலுள்ள நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையானது நாட்டின் பொருளாதாரத்துக்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் பேராபத்து என்பது நிரூபணமாகியிருப்பதுடன் இந்தக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும் - என்றுள்ளது. (ம-14.இ)

### காலிமுகத்திடல் போராட்டம்

# பிரிட்டன் யுவதியின் நுழைவிசைவு ரத்து

கொழும்பு, ஓக.12

காலிமுகத்திடல் போராட்டக்களத்தின் சம்பவங்களை சமூக ஊடகங்களில் ஒளிபரப்பினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பிரித்தானிய யுவதியின் நுழைவிசைவை இரத்துச் செய்ய இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அவர் நாட்டை விட்டு வெளியேறவேண்டும் என குறித்த திணைக்களம் அறிவித்துள்ளது. (ய)

### ஊட்டச்சத்து இன்மையால்

# சிறுவர்களின் அறிவு மந்தமாகும் அபாயம்

கொழும்பு, ஓக.12



கடந்த சில மாதங்களில் சிறுவர் மருத்துவமனைக்கு வரும் குழந்தைகளில் 20 வீதமானவர்கள் முன்னர் இருந்ததை விட அதிகளவு எடை குறைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது என்று குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த நிலைமை தொடருமானால் அவர்களின் வயதுக்கு ஏற்ற எடை குறைவாக உள்ள குழந்தைகளாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். வயதுக்கு ஏற்ப குழந்தையின் எடை அதிகரிக்காவிட்டால், அறிவு வளர்ச்சி குன்றிய குழந்தையாக மாறுவது மட்டுமல்லாமல், உள் உறுப்புகள் சரியாக வளர்ச்சியடையாத நோயுற்ற குழந்தையாகவும் மாறும்.

இந்த நிலையை உடனடியாகத் தடுக்க, குழந்தைகளுக்கு சரியான ஊட்டச்சத்தை வழங்கவேண்டும். இல்லையெனில் வருங்கால சந்ததியினர் பேரழிவைச் சந்திக்க நேரிடும் - என்றார். (எ-இ)

# நாட்டில் கருத்துச் சுதந்திரம் மதிக்கப்படுதல் வேண்டும்!

## ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 12



இலங்கையை மீண்டும் சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு கூட்டு ஒத்துழைப்பு அவசியம். அதே போன்று நாட்டில் மனித உரிமைகள், கருத்துச் சுதந்திரம், கருத்துவேறுபாட்டு உரிமை என்பன பேணப்படவேண்டும் - இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான முக்கியமான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் புதன் கிழமை நடைபெற்றது. இதன்போதே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில், இலங்கையின் நெருக்கடியான காலகட்டங்களில் ஐரோப்பிய ஒன்றியம் பங்குதாரராக ஒத்துழைப்பு நல்கும். இலங்கையை மீண்டும் சரியான பாதையில் கொண்டுசெல்ல கூட்டு ஒத்துழைப்பு நடவடிக்கை தேவை. இதேவேளை, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை, சர்வதேச நாணய நிதியம், மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய 3 வெளிவிவகார நடவடிக்கைகளில் முக்கியமாக கவனம் செலுத்தப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் ஜனாதிபதி ரணிலிடம் தெரிவித்தனர்.

இந்தச் செயன்முறைகள் வெற்றியடைய இலங்கை அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று ரணில் விக்கிரமசிங்க அவர்களிடம் உறுதியளித்தார். (ச-இ)

# வெளிநாட்டு நிறுவனங்களுக்கு ஏன் எரிபொருள் கையாள்கை?

## உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்

கொழும்பு, ஓக. 12

வெளிநாட்டு நிறுவனங்கள் எரிபொருள் இறக்குமதி செய்வதற்கும், விநியோகத்தில் ஈடுபடுவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள நிலையில், அதைச் சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுதந்திர சேவையாளர் சங்கம், அதன் தலைவர் சேத்திய பண்டார ஏக்கநாயக்க மற்றும் செயலாளர் பண்டார அரம்பேகும்புர ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.


மனுவின் பிரதிவாதிகளாக ஜனாதிபதிக்குப் பதிலாக சட்டமாதிபர், பிரதமர், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, அமைச்சரவையின் ஏனைய உறுப்பினர்கள், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உட்பட 28 பேர் பெயரிடப்பட்டுள்ளனர்.

நீண்டகால அடிப்படையின் கீழ் எரிபொருள் இறக்குமதி, கொள்வனவு, நாட்டுக்குள் விநியோகம் மற்றும் விற்பனை நடவடிக்கைகள் தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அமைச்சரவை கடந்த ஜூன் 29 ஆம் திகதி அனுமதியளித்தது.

அமைச்சரவையின் குறித்த தீர்மானம் முற்றிலும் சட்டத்துக்கு முரணானது எனவும் தான்தோன்றித் தனமானது எனவும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)

# கர்தினாலுக்கு கொரோனா

கொழும்பு, ஓக.12



பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர் தற்போது சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பேராயரின் உடல்நிலை சீராக இருப்பதாக மருத்துவமனை நிர்வாகம் அறிக்கையிட்டுள்ளது. (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பை உடைக்க ரணில் பொய்ப் பரப்புரை

## முன்னாள் நடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஓக. 12**

**கட்சிகளைப் பிரிப்பதிலும், மக்களைத் திசை திருப்புவதிலும் கைதேர்ந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இவ்வாறானதொரு வியூகத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வாக்களித்தனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சி அரசை அமைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க படாதபாடு படுகின்றார். ஆனால், பெரமுனவைத் தவிர எந்தப் பெரிய கட்சிகளும் அவருக்கு ஆதரவு வழங்குவதாக இல்லை. ஏனெனில் ரணில்மீது நம்பிக்கை வைப்பதற்கு இந்தக் கட்சிகள் தயாரில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியோ அல்லது உலக நாடுகளின் உதவியோ கிடைக்க வேண்டுமாக இருந்தால், இலங்கை தொடர்பில் அவற்றுக்கு ஒரு நம்பிக்கை வரவேண்டும். அந்த நம்பிக்கையை பெரமுன அரசை வைத்துக் கொண்டோ அல்லது ரணிலின் கடந்த காலங்களைக் கொண்டோ ஏற்படுத்தி விடமுடியாது.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலும், காணி விடுவிப்புத் தொடர்பிலும், எதிர்கால இலங்கை தொடர்பிலும் தனது அக்கிராசன உரையில் ரணில் முன்வைத்துள்ள கருத்துக்கள் யாவும் இந்த நம்பிக்கையைப் பெறுவதற்காக முன்வைக்கப்பட்ட பொய்யுரைகளே. அவற்றுக்கு செயல்வடிவம் கிடைக்கும் என்ற நம்பிக்கை மக்களுக்கோ- எமக்கோ இல்லை.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இதே ரணில்தான் பிரதமராக இருந்தார். என்ன தீர்வை அவர் தந்தார்? எத்தனை பிரச்சினைகளை அவரால் தீர்க்க முடிந்தது? இவை தொடர்பில் நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

**சமஷ்டி கைவிடப்படாது**

இந்த நாட்டில் நிலையான அமைதியை ஏற்படுத்த வேண்டுமாயின், அபிவிருத்தியைக் காணவேண்டுமாயின் சமஷ்டி அதிகாரம் தமிழர்களுக்கு வேண்டும். மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதாது. அதற்கும் அப்பால் சென்று சிந்திக்க வேண்டும்.

புலம்பெயர் தமிழர்களை அரவணைக்கும் போக்கை ரணிலில் அரசு கைக்கொள்ளவேண்டும். புலம்பெயர் தமிழர்கள் தமிழர் தாயகத்திலும் இலங்கையிலும் முதலிடுவதற்குத் தயார். ஆனால், அவர்கள் தமக்கும் தம் முதலீடுகளுக்கும் உத்தரவாதத்தை எதிர்பார்க்கின்றார்கள். இதற்கு ரணிலின் அரசு வழங்கப் போகும் பதில் என்ன?

இறைமையுள்ள ஒரு நாடாக சீனக் கப்பலின் வருகையைக்கூட இவர்களால் நிறுத்தமுடியவில்லை. ஏனெனில், இந்த நாட்டின் நிலபுலன்களுடன் இணைந்தாற்போல் இறைமையையும் இவர்கள் விற்றுவிட்டார்கள். இந்த நிலை மாறாதபட்சத்தில் நாம் 'கோத்தா கோ கோம்' போன்று 'ரணில் கோ கோம்' போராட்டத்தை விரைவில் எதிர்பார்க்கலாம்.

(ம-125)



## நெருக்கடியைத் தீர்க்க ரணில் என்ன நடவடிக்கை எடுத்தார்?

### நாடாளுமன்றில் டலஸ் கேள்வி

கொழும்பு, ஓக. 12

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று ஒருமாதமாகவுள்ள நிலையில், தற்போதைய நெருக்கடியைத் தீர்க்க ஜனாதிபதி ரணில் முன்வைத்த நடவடிக்கை என்ன? இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும கேள்வியெழுப்பியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற கொள்கை விளக்க உரை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டே இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உரையின் உள்ளடக்கங்கள் தொடர்பில் எங்களுக்கு எந்தப் பிரச்சினைகளும் கிடையாது. ஜனாதிபதியின்கொள்கை உரை வசனங்கள் அழகுபடுத்திய உரையாக இருக்கக் கூடாது. ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு மாதமாகவுள்ளது. இந்தக் காலப்பகுதியில் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு அவர் முன்னெடுத்த நடவடிக்கை என்ன?

ஜனாதிபதியாக ரணில் பதவியேற்றது முதல் இதுவரையில் கட்சியில் தோல்வியடைந்த நண்பர்களினதும் மற்றும் தனக்கு ஒத்துழைப்பு வழங்கிய உறுப்பினர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மட்டும் நடவடிக்கை எடுத்துள்ளாரே தவிர, மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வேலைத்திட்டத்தை முன்வைத்ததாகத் தெரியவில்லை -என்றார்.

(ம-14-இ)

## மழைக்குச் சாத்தியம்

மேல்மாகாணம் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-55 கிலோ மீற்றர் வேகத்திலும், மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று அதிகரித்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ய-இ)

## ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்த பெண்கள் கைது!

ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும் மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் குறித்த பிரதேசத்தில் இருவரும் இணைந்து வர்த்தக நிலைய மொன்றை நடத்தி வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதி மாளிகை போராட்டக்காரர்களினால் கைப்பற்றப்பட்டதன் பின்னர் சமூக வலைத்தளங்களில் பரவிய ஒளிப்படங் களைக் கொண்டு இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். ஜனாதிபதி மாளிகையில் அத்துமீறி நுழைந்தமை, பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது. (ய)



ஏழாலை - சூராவத்தை முத்துமாரியம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் கோலாகலமாக இடம்பெற்றது. பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் பக்திபூர்வமாகத் தேர்த் திருவிழாவில் கலந்துகொண்டனர்.

(ம-14-27)

## அபிவிருத்திக்குழுத் தலைமையை கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்காது!

### நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவிப்பு

மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் பதவியை கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்காது என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அபிவிருத்திக் குழுத் தலைமைப் பதவிக்கு நியமிப்பது தொடர்பான செய்திகள் வெளிவந்திருக்கின்றன. அது தொடர்பில் ஒரு தெளிவுபடுத்தலை வழங்கவேண்டியது அவசியம். தமிழர்கள், பல வலியுறுத்தல்களைத் தொடர்ந்து அரசுக்கு விடுத்து வருகின்றார்கள். அரசியல் கைதிகளின் விடுதலை, காணிவிடுவிப்பு என்பன அவற்றில் சில. இவை தொடர்பில் அரசும் அக்கறையுடன் செயற்பட்டால் நாங்கள் அபிவிருத்திக் குழுத் தலைமையை ஏற்பது தொடர்பில் பரிசீலிக்கலாம்.

இன்று வடக்கு ஆளுநருடைய செயற்பாடு மிகவும் பாரதூரமாக காணப்படுகின்றது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் எடுத்த தீர்மானத்தை நிராகரித்து, வடக்கு ஆளுநர் அலுவலகத்தால் கடிதம் அனுப்பும் அளவுக்கு நிலைமை காணப்படுகின்றது. அப்படியெனில், ஏன் இந்த ஒருங்கிணைப்புக் குழுக்கள்? இவை மக்களை ஏமாற்றுவதற்காக அரசால் கொடுக்கப்படும் பதவிகளாகும் -என்றார்.

(ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்கட்டணச் சுமைக்கு திறைசேரியூடாகத் தீர்வு

## குறைவருமானக் குடும்பங்களுக்கு நிவாரணம் என்று அறிவிப்பு




**கொழும்பு, ஓக. 12**

**மின்கட்டண அதிகரிப்பால் பாதிக்கப்படும் குறைவருமானம் பெறும் குடும்பங்களுக்குத் திறைசேரியூடாக நிவாரணம் வழங்கப்படும் என்று வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தின் நேற்றுமுன்தின அமர்வின்போது, மின் கட்டணத் திருத்தம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை மின்சாரசபை தொடர்ந்து நட்டத்தை எதிர்கொண்டுள்ளது. தனியார் மின்நிலையங்கள், அரச வங்கிகள், மின் விநியோகஸ்தர்கள் ஆகிய தரப்பினருக்கு மாத்திரம் 612 பில்லியன் ரூபா நிதியை செலுத்த வேண்டிய நிலையில்தான் மின் கட்டணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மின்கட்டணத்தை அதிகரிக்காமல் மின்சாரசபையின் நிதி நெருக்கடியை முகாமைத்துவம் செய்ய ஏதேனும் திட்டமிருந்தால் எதிர்த்தரப்பினர் அதனை முன்வைக்கலாம். இலங்கை மின்சாரசபையின் வலியுறுத்தலுக்கமைய பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் அனுமதியுடன்தான் மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மின்கட்டணத் திருத்தம் ஊடாக நிவாரணம் வழங்க திறைசேரியுடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாள்களில் இலங்கைப் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அதற்கான திட்டத்தைச் செயற்படுத்தும்.

மின்சாரசபையின் நிதி நெருக்கடியை முகாமைத்துவம் செய்ய வேண்டுமாயின் மின்கட்டணம் திருத்தம் செய்யப்படவேண்டும். 2013ஆம் ஆண்டுக்குப் பிறகு மின் கட்டணம் திருத்தம் செய்யப்படவில்லை. தற்போதைய மின்கட்டண திருத்தத்தின் ஊடாக மாத்திரம் மின்சாரசபையின் நிதி நெருக்கடியை முகாமைத்துவம் செய்ய முடியாது. மின்னுற்பத்திக்கான செலவினைக் குறைக்க பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (ம)

## மின்கட்டண அதிகரிப்பு சுமையை ஏற்படுத்தும்

### சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 12

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மின் கட்டண அதிகரிப்பு பொதுமக்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் மேலும் சுமையை ஏற்படுத்தும் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மின் கட்டண உயர்வின் மூலம் அனைத்து சமூக நீதி அடிப்படைகளும் மீறப்பட்டுள்ளன. குறைந்தளவு மின்சாரத்தைப் பயன்படுத்தும் மக்களுக்கு இவ்வளவு சதவீதம் கட்டணத்தை உயர்த்துவது நியாயமற்றது. இந்தப் பொருளாதாரச் சூழ்நிலையில் குறைந்தளவான மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்கள் உண்மையில் நாட்டுக்கு நன்மை செய்கிறார்கள்.

இலங்கை மின்சாரசபையின் செயற்றிறனின்மை மற்றும் ஊழல் காரணமாக இலங்கை மின்சாரசபை நஷ்டத்தை சந்தித்து வருகின்றது. எனினும் மின்சார சபையின் அனைத்து நஷ்டங்களையும் பொதுமக்கள் மீது சுமத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (ம-14-இ)

## பீல்ட் மார்ஷலுக்கு மீண்டும் ஆபத்து!

கொழும்பு, ஓக. 12

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா வகிக்கும், பீல்ட் மார்ஷல் பதவி தொடர்பாகத் தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டும் என்று அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சரத் பொன்சேகா அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்ற அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இறுதியான போராட்டத்துக்கு மக்கள் கொழும்புக்கு வரவேண்டும் என்றும், உயிர்களை தியாகம் செய்தேனும் போராட்டத்தை வெல்ல வேண்டும் எனவும் பொன்சேகா அண்மையில் கூறியிருந்தார்.

ஆயினும் அவரது கோரிக்கையை ஏற்று போராட்டத்துக்காக மக்கள் கொழும்புக்கு வரவில்லை. ஆனால், மக்களைத் தூண்டி விடும் வகையில் பொன்சேகா கருத்து வெளியிட்டு வருகின்றார் என்று அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். இறுதிப் போரில் இராணுவத் தளபதியாகக் கடமையாற்றிய சரத் பொன்சேகாவுக்கு 2015 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவிக்கு வந்த பின்னர் இராணுவத்தின் மிக உயர்ந்த பதவியான பீல்ட் மார்ஷல் பதவியை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## யூரியாவை 15,000 ரூபாவுக்கு வழங்குவதற்குத் தீர்மானம்!



கொழும்பு, ஓக.12

தேயிலை, சோளம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கைகளுக்காக 50 கிலோகிராம் யூரியா பசளையை ரூ.15 ஆயிரத்துக்கு வழங்க விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட யூரியா பசளையில் 30 ஆயிரம் மெற்றிக் தொன் ஏற்கனவே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதில் சுமார் 10 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா வடக்கு மாகாணத்துக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. தற்போது கையிருப்பிலுள்ள யூரியாவை பெரும்போக செய்கைக்காக வழங்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ய)

## நுணாவில் ஐ.ஓ.சியில் இன்று உழவுவியந்திரங்களுக்கு டீசல்

யாழ்ப்பாணம், ஓக. 12

பெரும்போக நெற்செய்கையை முன்னிட்டு நிலத்தைப் பண்படுத்த உழவுவியந்திரங்களுக்குத் தேவையான டீசல் நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தால் வழங்கப்படவுள்ளது.

அதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை டீசல் விநியோகம் இடம்பெறவுள்ளது. எனவே தென்மராட்சி பிரதேசத்தில் உழவு இயந்திரங்களை வைத்துள்ள விவசாயிகள் தத்தமது கமக்கார அமைப்புகள் ஊடாக விவரங்களை வழங்குமாறு நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் கேட்டுக்கொண்டுள்ளார். அத்துடன் கியூ.ஆர் முறைமையின் அடிப்படையிலேயே இந்த டீசல் விநியோகம் இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-159)


## நியூ டயமன்ட் கப்பல் விபத்து: 2 வருடங்களின் பின் வழக்கு



இலங்கைக் கடற்பரப்பில் விபத்துக்குள்ளான நியூ டயமன்ட் கப்பலால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை வழக்குத் தொடரத் தீர்மானித்துள்ளது. கப்பல் விபத்து இடம்பெற்று இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த வழக்கு தொடரப்படவுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து மசகு எண்ணெய் ஏற்றிவந்தபோது இலங்கையின் கிழக்குக் கடற்பகுதியில் குறித்த கப்பல் தீப்பற்றலுக்கு உள்ளானது. இந்த நிலையில் இந்த விபத்தால் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கான இழப்பீட்டை வழங்க காப்புறுதி நிறுவனத்தால் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதன்காரணமாகவே வழக்குத் தொடரப்படவுள்ளது என கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. (ச-இ)

## பேர்ள் கப்பல் விபத்துக்கு இழப்பீடு பெற நடவடிக்கை



கொழும்பு, ஓக. 12

கடந்த 2019ஆம் ஆண்டு 'எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்' தீ விபத்தால் ஏற்பட்ட சேதத்துக்கு இழப்பீட்டைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கப்பல் தீ விபத்தால் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகள், இழப்பீடு வழங்கப்பட்டுள்ள முறைமை மற்றும் குறித்த நிறுவனங்கள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெ[illegible] அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்' விபத்துத் தொடர்பில் இதுவரையில் முன்னெடுக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடர்பில் சட்டமா அதிபர் சஞ்சய ராஜரத்னத்தால் கருத்துக்கள் முன்வைக்க ப்பட்டன. அத்துடன் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் கடற்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதற்கமைய கப்பல் தீ விபத்து தொடர்பில் இதுவரையில் முன்னெடுக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகள் மற்றும் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட நடவடிக்கைகளைத் தாமதமின்றி துரிதமாக முன்னெடுக்கவேண்டும் - என்றார். (ம-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எதிர்காலச் சந்ததியைக் காப்பது கடமை!

நாட்டின் பொருளாதார நெருக்கடி இப்போது தீரும், அப்போது தீரும் என்று அரசாங்கம் ஆருடம் கூறிக் கொண்டிருக்கின்றது. எரிபொருள், எரிவாயுவைத் தாண்டி மக்கள் சிந்திக்காத நிலையில், பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டிருக்கும் மறைமுகப் பாதிப்புக்களை எவரும் கணக்கில் எடுப்பதாக இல்லை. நாட்டின் எதிர்காலம் பற்றிப் பேசுவோர், இளையதலைமுறையினர் சந்திக்கும் சிக்கல்கள் பற்றி கரிசனை கொள்வதாக இல்லை.

இலங்கையில் இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையால் பொருள்களின் விலையேற்றம், பொருள்களுக்கான தட்டுப்பாடு, எரிபொருள் இன்மை என்பவையே முன்னிற்கின்றன. ஆனால் இந்த நெருக்கடியால் நாட்டின் கல்வித்துறை எதிர்கொண்டுள்ள சவால்களும், அவற்றால் எழவுள்ள நீண்ட நாள் தாக்கங்கள் தொடர்பாகவும் எவரும் பெரிதாக அலட்டிக்கொள்வதாக இல்லை. துறைசார்ந்தவர்கள் இது தொடர்பில் அபாய எச்சரிக்கைகளை வெளியிட்டுள்ளபோதும், அவற்றை நிவர்த்திப்பதற்கான திட்டங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

நாட்டின் எதிர்காலம் சிறார்களின் கைகளிலேயே இருக்கின்றது. சிறந்த கல்வியறிவு கொண்ட சமூகமே நாட்டின் முன்னேற்றத்துக்கு அவசியமானது. நெருக்கடிக் காலங்களிலும், பெருந்தொற்றுக் காலங்களிலும் நாடு தாக்குப்பிடிப்பதற்கு நாட்டு மக்களின் அறிவு மட்டமும் பெரும் பங்காற்றியிருந்தது. ஆனால் இப்போது எழுந்திருக்கும் நிலைமையால், நாட்டின் எதிர்காலச் செல்வங்களின் கல்வியறிவு மட்டமும், போசாக்கு மட்டமும் குறைந்துவிடும் என்ற அச்ச நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

கொரோனாப் பெரும் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த பாடசாலைக் கல்வி, பொருளாதார நெருக்கடியாலும் இன்னமும் சிக்கலுக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியால் பாடசாலைகள் தொடர்ச்சியாக நடத்தப்படுதற்குத் தடை ஏற்பட்டிருக்கின்றது. இப்போது பாடசாலைகள் நடைபெற்றாலும் 30 முதல் 40 சதவீதம் மாணவர்களின் வரவு குறைந்திருக்கின்றது.

பாடசாலை மாணவர்களில் பலர் பாடசாலைக் கல்வியில் இருந்து விலகிக் கொள்வதற்கு உணவு மற்றும் எரிபொருள் பிரச்சினையே பிரதான காரணமாகியிருக்கின்றது. உணவுப் பொருள்களின் விலையேற்றம் காரணமாக பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப முடியாத நிலைமை பெற்றோருக்கு ஏற்பட்டிருக்கின்றது. 60 வீதமான மாணவர்கள் மதிய உணவு கொண்டுவருவதில்லை என்பதும், பாடசாலைகளில் மாணவர்கள் மயங்கி வீழும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்பதும் அதிபர்கள் சங்கத்தால் வெளியிடப்பட்டிருக்கும் தகவல்.


இவை சாதாரணமாகக் கடந்து சென்றுவிடக்கூடிய விடயங்கள் அல்ல. நெருக்கடி தீர்ந்தபின்னர் அனைத்தும் வழமைக்குத் திரும்பி விடும் என்று ஒதுக்கக்கூடிய விடயங்களும் அல்ல. இவற்றின் தாக்கங்கள் தற்போதைக்கு வெளித்தெரியாவிட்டாலும் எதிர்காலத்தில் இவற்றின் தாக்கங்கள் பெரும் அளவில் வெளிப்படும். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீண்டாலும் அதன்பின்னர் முன்னகர முடியாத நிலைமையை இவை ஏற்படுத்தும்.

மாணவர்களின் பாடசாலைக் கற்றல் நடவடிக்கைகளை வழமைக்குக் கொண்டுவருவதற்கும், மாணவர்களின் போசாக்கு மட்டத்தைப் பேணுவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். வெறுமனே அரசாங்கத்தின் பக்கம் பொறுப்பைத் தள்ளிவிட்டு வளர்விருக்காது மாகாண மட்டங்களிலோ, மாவட்ட மட்டங்களிலோ, கிராம மட்டங்களிலோ இதுதொடர்பாகத் திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்த இயலுமானவர்கள் முயலவேண்டியது அவசியமானதும் அவசரமானதுமான தேவை.

நாளொரு நல்வார்த்தை

“நீ செய்யும் காரியத்துக்கு நீயே பொறுப்பாளியாயிருக்கவேண்டும். நீ செய்வதற்குப் பிறர் தண்டனை அடையும்படி ஏற்படக் கூடாது”

- மக்ஸிம் கார்க்கி




# சீனக்கப்பல் வருவதற்கு அனுமதி அளிக்கவில்லை!

## துறைமுக அதிகாரி தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 12**

**இலங்கைக்கு வருகைதரவுள்ளதாகக் கூறப்படும் சீனாவின் ஆய்வுக்கப்பலான ‘யுவான் வாங் 5’ கப்பலுக்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என துறைமுக அதிகாரி நிர்மல் சில்வா தெரிவித்துள்ளார்.**



குறித்த சீனக்கப்பல் இலங்கைக்கு வருவதற்கு கடும் எதிர்ப்பை இந்தியா தெரிவித்திருந்தது. அதையடுத்து ‘யுவான் வாங் 5’ கப்பலின் வருகையை ஒத்திவைக்குமாறு கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்துக்கு உத்தியோகபூர்வமாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இந்தக் கப்பல் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிடும் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில் ஒரு கப்பல் நாட்டுக்கு வருகை தரவுள்ளது என்றால் துறைமுக அதிகாரியிடம் அனுமதி பெற வேண்டும். ஆயினும் கப்பல் நாட்டுக்கு வருவதற்கு இதுவரை அனுமதி அளிக்கப்படவில்லை என துறைமுக அதிகாரி நிர்மல் சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கப்பலின் பயணத் திசை மாற்றப்பட வாய்ப்புள்ளது எனவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ச-இ)

# பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருடன் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் சந்திப்பு

கொழும்பு, ஓக.12

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இருவரும் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்பிலும், இலங்கையின் சமீபகால அரசியல், பொருளாதார நிலைவரங்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கை ஓர் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறுவதை அமெரிக்கா விரும்புவதாக அமெரிக்கத் தூதுவர் டிரான் அலஸிடம் தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதியைப் பெறுவதில் இலங்கைக்கு அமெரிக்காவின் ஆதரவையும் அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

அத்துடன் இலங்கை மக்களின் மனித உரிமைகளை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்தியுள்ளார். ஓகஸ்ட் 9 ஆம் திகதி எந்த ஒரு பேரழிவு சம்பவமும் நடைபெறவில்லை என்பதில் தான் மகிழ்ச்சி அடைவதாகவும் அமெரிக்கத் தூதுவர் அமைச்சரிடம் தெரிவித்தார். (ய)

நாளை
13.09.2022
சனிக்கிழமை
ஆடி 28

சுபநேரம் : 03.05 - 04.35
ராகுகாலம்: 09.05 - 10.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் செயற்பாடுகளுக்கு தமிழ் மக்கள் பதில் வழங்குவார்கள்

## ஜே.வி.பி.யினர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஓக. 12**

**மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசுடன் பேச்சில் ஈடுபடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நடவடிக்கைகளுக்குத் தமிழ் மக்கள் சிறந்த பதிலை வழங்குவார்கள் -இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளார் மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன்.**

யாழ். ஊடக அமையத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:-

சர்வகட்சி அரசாங்கம் என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாக்க மேற்கொள்ளப்படும் ஒரு காய் நகர்த்தலாகும். இந்தச் செயற்பாட்டின் முன்னோட்டமாக தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை அழைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சில் ஈடுபட்டு வருகிறார். தமிழ்மக்கள் கடந்த 74 வருடக் காலத்துக்கு மேலாக அடக்குமுறைகளுக்கு அகப்பட்டு பல துன்பங்களை அனுபவித்த மக்கள். இந்த மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் காணப்படுகின்ற நிலையில் மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசி எதையாவது தமிழ்மக்களுக்கு பெற்றுக்கொடுத்தால் அது வரவேற்கத்தக்கது. எனினும் அவ்வாறில்லாமல் ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாப்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவார்கள். ஆனால், அதற்கான முடிவுகளை தமிழ் மக்களே எடுக்க வேண்டும். தமிழ் மக்கள் தக்க பதிலை வழங்க வேண்டும் -என்றார். (ம-14-20)



அரசியல் தீர்வைக் கோரிய

## 10ஆம் நாள் போராட்டம் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஓக. 12

வடக்குகிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வைக்கோரி முன்னெடுக்கப்படும், 100 நாள்கள் கவனவீர்ப்பு போராட்டத்தின் 10ஆவது நாள் போராட்டம் தருமபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்குகிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் கடந்த முதலாம் திகதி மன்னாரில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று 10ஆவது நாளாக கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது. 'கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்' எனும் தொனிப் பொருளில், 8 மாவட்டங்களில் சுழற்சி முறையில் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. போராட்டத்தில் கிராம அமைப்புக்கள், விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள், மாணவர் அமைப்புக்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம-14-113)

அத்துகோரள எம்.பியினது

## மோதிரத்தை திருடினாரென சந்தேகநபரொருவர் கைது

கொழும்பு, ஓக. 11

மே 9 வன்முறையில் நிட்டம்புவவில் படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள அணிந்திருந்த மோதிரங்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பான சந்தேகநபர் நிட்டம்புவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் மீகஹகிவுல உள்ளூராட்சி சபைத் தலைவரின் அலைபேசி திருடப்பட்டமை தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் நிட்டம்புவ ரன்பொகுணகம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து திருடப்பட்ட அலைபேசி மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். அதனையடுத்து சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தியபோது, எதிர்வரும் 22ஆம் திகதிவரை அவர்களுக்கு விளக்கமறியல் பிறப்பிக்கப்பட்டது. (ம-14)

## அதிக பேருந்துக் கட்டணத்தை அறவிடுவோருக்கு நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 12

புதிய பேருந்துக் கட்டணத் திருத்தத்துக்கு அதிகமாக பேருந்துக் கட்டணங்களை அறவிடும் பேருந்துகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ஜெனரல் நிலான் மிரண்டா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பிட்ட சில தனியார் பேருந்துகள் திருத்தப்பட்ட கட்டணத்தை விடவும் அதிக கட்டணம் அறவிடுவதாக போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. அதற்கமைய மாகாண பேருந்துகளில் இடம்பெற்ற பேருந்துக் கட்டணங்கள் தொடர்பான சம்பவங்களை விசாரிக்க பொலிஸாரை நியமிக்குமாறு அனைத்துப் பயணிகள் போக்குவரத்து அதிகாரிகளுக்கும் போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கிடைத்த முறைப்பாட்டுக்கமைய சம்பவங்களில் ஈடுபட்ட சில பேருந்து உரிமையாளர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அபராதமும் விதிக்கப்பட்டது. அத்துடன் பயணிகளிடமிருந்து அறவிடப்படும் அதிக கட்டணத்தைத் திருப்பிச் செலுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது -என்றார். (ம-14-இ)

## சட்டவிரோத சுண்ணாம்புக்கல் அகழ்வு: உழவியந்திரம் பொலிஸாரின் பிடியில்!

வயாவிளான் குட்டியப்புலம் பகுதியில் சுண்ணாம்புக்கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உழவியந்திரம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்ட நபர், பொலிஸார் வருவதை அவதானித்துத் தப்பியோடிய நிலையிலேயே அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உழவியந்திரம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. தப்பிச்சென்ற நபரைக் கைதுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-23)

## இலவச யோகா வகுப்புகள் திருநெல்வேலியில் நாளை!

யாழ்ப்பாணம், ஓக. 12

யாழ். யோகவித்யா பீடத்தால் இலவசமாக நடத்தப்படும் யோகக்கலை வகுப்புக்கள் திருநெல்வேலி வடக்கு பழங்கிணற்றடி பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் நாளை 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் காலை 6 மணி முதல் 8 மணிவரை நடைபெறவுள்ளன.

வகுப்புகளில் 16 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் கலந்துகொண்டு பயிற்சி பெறமுடியும் எனவும் சுமார் மூன்றுமாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியை பயிலவிரும்பும் ஆர்வமுள்ளவர்கள் நாளை 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு நேரில் வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும் எனவும் ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 12

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் பகுதியில் கசிப்புடன் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காட்டுப்புலம் பகுதியிலுள்ள வீட்டில் கசிப்பு மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், அங்கு சென்று சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸார் 60 வயதான சந்தேகநபரைக் கைது செய்தனர். அதன்பின்னர் சந்தேகநபரிடமிருந்து 5 லீற்றர் கசிப்பும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. (ம-14,27)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 12

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நீண்டகாலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த திருகோணமலையைச் சேர்ந்த நபரொருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டபோதே குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து 340 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டன. (ம-14,26)

## உடைமையில் கசிப்பு: மூளாயில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 12

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாய்- வேரம் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் வட்டுக்கோட்டை பொலிஸாரால் அண்மையில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேபகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மூளாய் -வேரம் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய ஒருவர் சோதனைக்குட்படுத்தப்பட்டபோதே அவரிடமிருந்து 5 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது. (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊஞ்சலில் ஆடிய மாணவன் இறப்பு

கொழும்பு, ஓக. 12

பாடசாலை ஊஞ்சலில் ஆடிய 14 வயதுடைய மாணவனொருவன் கீழே விழுந்து உயிரிழந்துள்ளான் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மொறட்டுமுல்ல வில்லோராவத்த பிரதேச அரச பாடசாலையொன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பாடசாலையின் மதிய இடைவேளையின்போது, சக மாணவர்களுடன் இரும்பில் செய்யப்பட்டிருந்த ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருந்தபோது குறித்த மாணவன் கீழே விழுந்து படுகாயமடைந்துள்ளான். படுகாயமடைந்த மாணவன், லுனாவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளான். (ம-14,இ)

# ரணிலும், சஜித்தும் இணைய வேண்டும்

## ஹரினின் விருப்பம் இது



கொழும்பு, ஓக. 12

**ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஐக்கிய மக்கள் சக்தி இணையவேண்டும் என்பதே எனது இறுதி எதிர்பார்ப்பாகும். அந்த முயற்சியை நான் இன்னும் கைவிடவில்லை - இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ.**

நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு நெருக்கடிகளை சரியாக இனங்காண முடியாமல் இருந்தது. அதே போன்று நெருக்கடிக்கு குறுகியகால மற்றும் நீண்ட கால வேலைத்திட்டங்களும் இருக்கவில்லை. அதுவே நாட்டுக்குள் குழப்பம் ஏற்படக் காரணமாகும். ஆனால் இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது மக்கள் புதிய எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர். ரணில் சரியாக செய்யாவிட்டாலோ இந்த அரசாங்கம் சரியாக செய்யாவிட்டாலோ மீண்டும் மக்கள் போராடலாம். நாங்கள் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம். பதவிக்காக வரவில்லை. பொறுப்புடன் செயற்பட்டோம். அத்துடன் நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு நான் பிரதிநிதித்துவப்படுத்திய ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்கு அழைப்பு விடுத்தோம். கட்சி வரவில்லை. நாங்கள் வந்தோம். மொட்டுக் கட்சியைப் பாதுகாக்கவே ரணில் விக்கிரம சிங்கவை நியமித்துள்ள தாகக் கூறுகின்றனர். ஆனால் ரணிலுக்கு முன்னர் சஜித்தையே கோத்தபாய ராஜபக்ச அழைத்திருந்தார். பின்னர் சரத் பொன்சேகாவை அழைத்தார்.

அப்படியென்றால் கட்சியைப் பாதுகாக்க அழைத்தார் என்றால் முதலில் ரணில் விக்கிரம சிங்கவையே அழைத்திருக்க வேண்டும்.

நான் இன்னும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினரே. இன்னும் எனது அலுவலகத்தில் சஜித் பிரேமதாஸவின் ஒளிப்படத்தைக்கூட அகற்றவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதையே நான் விரும்புகின்றேன். இதுவே எனது இறுதி இலக்காகும். நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண எமக்குள் இருக்கும் பேதங்களை அகற்றிவிட்டு நாட்டுக்காக ஒன்றுபட்டால் மாத்திரமே நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளலாம்-என்றார். (ம-14)


80 ஆவது பிறந்தநாள் நினைவும் 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

மலர்வு 01 • 07 • 1942



உதிர்வு 11 • 08 • 2014

அமரர் தவமணி தம்பிராசா

*திதி: ஆடித்திங்கள் அபரபக்ஷ பிரதமை*

ஆண்டுகள் எட்டு ஆனாலும் அன்னையே உங்கள்
அன்பின் அரவணைப்பு என்றும் எம் மனதை விட்டகலாது
எமது ஈரவிழிநீரால் உங்கள் பாதமலர் இறைஞ்சுகின்றோம்
உங்கள் நிழல் என்றும் எம்மனதிலே நிலைத்திருக்கும்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மஞ்சத்தடி, இணுவில். (cs.20267) (2.6)



மரண அறிவித்தல்

தோற்றம் 20.06.1935



மறைவு 10.08.2022

சுப்பிரமணியம் இராசரத்தினம்

(செல்லத்தம்பி)

(உரிமையாளர் - உவர்மலை லட்சுமியம்பாள் காட்வெயார்)

சரவணை வடக்கைப் பிறப்பிடமாகவும் உவர்மலை, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசரத்தினம் கடந்த (10.08.2022) புதன்கிழமை வத்தளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற லட்சுமியம்பாளின் அன்புக் கணவரும், ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மாபாகே றோமன் மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நேற்று (11.08.2022) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் மாபாகே இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
K.ஜெயசிங்கம் - பெறாமகன்
077 773 3314

(er 37036) (2.6)



கண்ணீர் அஞ்சலி



மலர்வு : 14.12.1944 உதிர்வு : 07.08.2022

எமது பூபாளராகங்கள் அமைப்பாளர்களில் ஒருவரும் கானமழை ஆற்றுகையாளரும் ஆன திருமதி தி.றோஜனா துரைராசா திலீபன் அவர்களின் தந்தையாரும், எமது கம்பர்மலை வித்தியாலயத்தின் (கொம்மாந்துறை) முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரும் பூபாளராகங்களின் ஆலோசகருமாகிய

அமரர் சிவக்கொழுந்து துரைராசா

அவர்கள் 07.08.2022 அன்று காலமானார்.

அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பள்ளிக்கூடம் என்றதுமே
பறந்தோடி வந்திடுவாய்
பாங்காக பல உதவி
விரைந்தோடி தந்திடுவாய்
அள்ளியே எமையணைத்து
அன்புமிகு தாயானாய்
அவனியிலே எமக்கெல்லா
ஆற்றலுமே நீயானாய்
காரிருக்கும் வரையே மயிலினாட்டம்
கதறுகின்றோம் உனையிழந்து குயிலினாட்டம்
நீரிருக்கும் வரையே மீனினாட்டம்
நீரிருக்கும் வரையே வானினாட்டம்
நேற்றுவரை எம்மோடு நிஜமாக இருந்தவரே
காற்றோடு வந்தசேதி கதிகலங்க வைத்ததய்யா
[illegible]றோம்
அனுதினமும் புலம்புகின்றோம்.

பூபாளராகங்கள் விழாக்குழு


## பெண் சுயதொழில் முயற்சியாளரை ஊக்குவிக்கும் திட்டம் முன்னெடுப்பு

ஜெசாக் நிறுவனத்தின் அனுசரணையில் யாழ். மாவட்டத்தில் பொருளாதார ரீதியில் பின்தங்கிய பெண் சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான திட்டம் முதற்கட்டமாக 6 பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதுதொடர்பில் யாழ். மாவட்ட சமூக மட்ட அமைப்புகள், சுயதொழில் முயற்சியாளர்கள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற பெண் உறுப்பினர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல தனியார் விடுதியொன்றில் நேற்றுமுன்தினம் கருத்தரங்கு இடம்பெற்றது. இந்தக் கருத்தரங்கில் பிரதேச மட்ட அமைப்புகளூடாக அவர்களுடைய பகுதிகளில் வசிக்கும் பெண்களின் ஆளுமைகள் மற்றும் வலுவைக்கொண்டு மேற்கொள்ளக்கூடிய கருத்திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு அவற்றை முன்னெடுக்கக்கூடிய ஏதுநிலைகளின் சாதக, பாதக நிலைமைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. அத்துடன் அவற்றுக்கான நிதியும் ஜெசாக் நிறுவனத்தால் ஒதுக்கப்பட்டது.

பொருளாதாரரீதியில் பின்தங்கிய நிலையில் வாழும் பெண்களை அதிலிருந்து மீட்டு சுயதொழில் முயற்சியாளர்களாக உருவாக்கும் நோக்குடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதன்படி முதற்கட்டமாக சுமார் 6 பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள குறித்த திட்டமானது மனித வளத்தையும் பிரதேசத்திலுள்ள இயற்கையான வளங்களையும் ஒன்றிணைத்து மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

கடந்த 16.08.2019 அன்று இறைவனடி சேர்ந்த
எங்கள் குடும்பத் தலைவி

## அமரர்
## பாலச்சந்திரன் தேவகி

அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவலைகள் இன்று (12.08.2022) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



இத்தியடி பிள்ளையார் கோவிலடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
076 272 7734

தோற்றம்
12.12.1951

மறைவு
16.08.2019



கண்டாவளை - ஊரியான் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பமொன்றுக்கு மாட்டுக் கொட்டகை ஒன்று அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளது.
'மலரும் கிளிநொச்சி' செயற்றிட்டத்தின் கீழ் கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தால் குறித்த குடும்பத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்தக் கொட்டகை அமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது. (ம-14-13)



சிவபூமி அறக்கட்டளையால் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில், புற்றுநோய் சிகிச்சை பிரிவிலுள்ள நோயாளருக்கு சத்துமா அண்மையில் வழங்கப்பட்டது. (ச)

## புனித லோறன்சியார் ஆலயத்தின் பெருவிழா

தலைமன்னார் புனித லோறன்சியாரின் ஆலய வருடாந்தப் பெருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.
மன்னார் மறைமாவட்டத்தின் ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் பெருவிழா கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் இடம்பெற்றது. (ம-14-60)



மிருசுவில் - விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்களுக்கான சின்னஞ் சூட்டும் நிகழ்வு அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ய-9)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இருப்பிடமின்றி நாடு நாடாக அலைகிறார் கோத்தாபய

## சஜித் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக. 12**

**இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் 69 இலட்சம் மக்கள் தன்னை ஆதரித்து வாக்களித்தனர் என்று வீறாப்புப் பேசி வந்த கோத்தாபய ராஜபக்ச இறுதியில் நாட்டிலிருந்து விரட்டியடிக்கப் பட்டார்.**

அதுமட்டுமன்றி இருப்பிடம் இல்லாமல் ஒவ்வொரு நாடு நாடாக அலைகின்றார். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இம்மாதம் 11ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய இலங்கை வருவார் என்றும், அவருக்கு முன்னாள் ஜனாதிபதிக்குரிய சலுகைகள் வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்த 'மொட்டு' அணியினர் வாயடைத்து நிற்க, கோத்தாபய தாய்லாந்து நாட்டின் காலடியில் தற்போது விழுந்துள்ளார். அங்கும் அவர் 3 மாதங்களுக்கு மேல் தங்கியிருக்க முடியாது.

அவர் இனி எந்த நாட்டின் காலடியில் விழப்போகின்றார் என்பதை 'மொட்டுக்' கட்சியினரிடம் கேட்க விரும்புகின்றேன். நாட்டைவிட்டு ஓடிய கோத்தாபய, இனி நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்க முடியாது. அவர் மீண்டும் இலங்கை வந்தால் மென்மேலும் அவமானங்களைச் சந்திக்க வேண்டி வரும். மக்களை வாட்டி வதைத்த கோத்தாபய, இன்று உலக அரங்கில் அவமானப்பட்டு நிற்கின்றார்' என்றார்.

(ஒ-22)

# முச்சக்கர வண்டிகளுக்கான 'கோட்டா' அதிகரிக்க ஆராய்கிறது அமைச்சு

கொழும்பு, ஒக. 12

கட்டணம் அறவிட்டு முழுநேரப் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு போக்குவரத்து அமைச்சுக்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

அறிக்கை கிடைத்ததன் பின்னர் முழு நேரம் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் 'கோட்டா' அதிகரிக்கப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

(ஒ-இ)


"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வார்"

## மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 07 . 1968



இறப்பு 10 . 08 . 2022

### அமரர் சிமியோன் சாமுவேல் யோண்சன்

(சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர், யாழ்/பல்கலைக்கழகம்)

பலாலி புனித செபஸ்தியார் ஆலயத்தை பிறப்பிடமாகவும் சந்தை தெற்கு வீதி சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிமியோன் சாமுவேல் யோண்சன் (சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர், யாழ்/பல்கலைக்கழகம்) அவர்கள் 10.08.2022 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிமியோன் குணசுர்ந்தம்மா ஆகியோரின் அன்பு மகனும் வேதநாயகம் காலஞ்சென்ற மேரிறோக்ராணி ஆகியோரின் மருமகனும் மரீனா மரிய டெய்சியின் அன்புக் கணவரும் றோஸ்யெனற் (பிரான்ஸ்), கிளைபேட்றொசில்டன் (உதவிக் கணக்காய்வாளர் - கொழும்பு), பேரிகிளாறன்ஸ் (உயர்தர மாணவன் - கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜில்பேட் றியூபன் (யூனியன் கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இக்னேசியஸ் றொயரினது (பிரான்ஸ்) மாமனாரும் கியோமர் மரியதாஸ் (ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்), மாசில் மனோகரி, மரிய மனோகரன் (ஓய்வுபெற்ற சாலைப்பரிசோதகர், இலங்கை போ.ச) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், றெஜி பிராங்கிளின், மரீனா, மரிய குயின்ஸ்ரா, றெஜினோல்ட் (அவுஸ்திரேலியா), பௌலா, மேரி கெலன் (ஓய்வு நிலை ஆசிரியர், யா/மயிலணி சைவ ம.வி), ஞானரத்தினம் (ஜோசப் புடைவையகம் - சுன்னாகம்), மரிய பவளம் (ஆசிரியர் - யா/யூனியன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், மேரிடயானா, அன்ரன் பற்றிக் (குயின்சாரெக்ஸ் சுன்னாகம்) றெஜிலுயிஸ்ரன் (ATR Impex Private.Ltd, மாவிட்டபுரம்), பசில்டா ஆகியோரின் சகலனும் எய்டன் ஜொனஸ் (பிரான்ஸ்) என்பவரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று (12.08.2022) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு இரங்கல் திருப்பலியின் பின் சுன்னாகம் புனித அந்தோனியார் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**076 375 1488 (மகன்)**
**077 117 4954 (மைத்துனர்)**

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 03 . 1932



மறைவு 11 . 08 . 2022

### கந்தையா செல்லையா

கெற்பேலி மத்தியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லையா அவர்கள் நேற்று (11.08.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் பாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், அமரர் ஜெகநாதன், அமரர் காந்தி, யோகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சுசீலாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), புஸ்பலதா (ஆசிரியர், யா/டிறிபேக் கல்லூரி), சாரதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அன்னப்பிள்ளை, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுகித்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தென்மராட்சி), சுஜீவன், சுவர்ணா, விஷ்ணவி, விஹாசினி, சபினா, நிவேதிகா ஆகியோரின் பேரனும், தஸ்வின், பிரகதிஸ், ரிஷிகேஷ், மேனஷிகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2022) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பெரியமாவடி, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சுவாமி குருக்கள்
### பஞ்சாட்சர ஐயர் [ஐயா சேர்]

பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது பிரம்படி லேன் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமி குருக்கள் பஞ்சாட்சர ஐயர் 11.08.2022 வியாழக்கிழமை நீராவியடி ஜெயவீரகத்தி விநாயகர் பாத கமலங்களை சென்றடைந்தார்.

அன்னார் மங்கையர்க்கரசி அம்மாவின் அன்புக் கணவரும் மஞ்சுளா (விவசாய விரிவாக்க அலுவலகம், திருநெல்வேலி), உமாகாந்தன் (மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்), ஸ்ரீகலா (பிரதேச செயலகம், உடுவில்), சுரேஸ்குமார் ஆகியோரின் அருமைத் தந்தையும் ஜெயானந்தன், குமுதா, ரமேஸ்சுதன் ஆகியோரின் மாமனாரும் தீட்சனா, பக்தவத்ஸலன் ஆகியோரின் செல்லப்பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2022) வெள்ளிக்கிழமை 34/5 பிரம்படி லேன் கொக்குவிலிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 999 3992**
**077 668 2262**
**076 125 1171**

தகவல் :
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீனக்கப்பல் வரும் ஆனால் வராது

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருத்து

கொழும்பு, ஓக. 12
சீனக்கப்பல் இன்னமும் இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசிக்கவில்லை. அது இலங்கைக்கு வருமா என்பது தொடர்பில் உறுதியாக எதுவும் தெரிவிக்க முடியாது. இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

சீனாவின் 'யுவான் வாங் 5' கப்பல் இன்னமும் இலங்கைக் கடற்பரப்புக்குள் பிரவேசிக்கவில்லை. சர்வதேசக் கடற்பரப்பில் தரித்து நிற்கின்றது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குள் குறித்த கப்பல் வருமா என்பது தொடர்பில் எம்மால் உறுதியான பதில் எதுவும் வழங்க முடியாது.

ஏனெனில் இரு நாட்டு அரசாங்கங்களும் இந்தக் கப்பல் விவகாரம் தொடர்பில் தீவிர பேச்சில் ஈடுபட்டுள்ளன - என்றார். (ஒ-5.22)

# சீன ஆதிக்கத்தைத் தடுக்க தனி ஈழமே ஒரே தீர்வு

## சென்னையில் முழங்கிய சிவாஜி

கொழும்பு, ஓக. 12
சீனாவின் ஆதிக்கத்தை தடுக்க தனி ஈழமே தீர்வு என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

சென்னை ஊடக மையத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்ததாக சென்னை ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்திலேயே சீன உளவுக் கப்பலுக்கு அனுமதி அளித்துள்ளார்.

தற்பொழுது இந்திய அரசின் தொடர் அழுத்தத்தால் சீன உளவுக் கப்பலுக்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுமதி மறுத்துள்ளார்.

இருப்பினும் அந்தக் கப்பலின் பயணம் தொடர்ந்துள்ளது. அது இலங்கைக்கு வருவதில்தான் தாமதமே தவிர அதன் பயணம் தடைப்படவில்லை.

இலங்கை அரசு தன்னுடைய சர்வதேச நிலைப்பாட்டில் தெளிவில்லாமல் உள்ளது. இந்தியாவோடும் இருப்போம் சீனாவோடும் இருப்



போம் என்றால் இந்தியா அதற்கு அனுமதிக்காது. எனவே இலங்கை அரசு அவர்களுடைய சர்வதேச நிலைப்பாட்டில் தெளிவடையவேண்டும். அத்தோடு இலங்கையின் வடக்கு, கிழக்கில் உள்ள ஈழத்தமிழர்களுக்காக இந்திய அரசு தலையிட்டு அவர்களுக்கென சுதந்திர வாக்கெடுப்பை நடத்த வழிவகை செய்ய வேண்டும்.

இன்றைய இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு நிரந்தர அமைதியான அரசியல் தீர்வைக் காணும் நோக்கத்தில் இந்திய அரசு அவசரமாகவும் உடனடியாகவும் தலையிட்டு சுதந்திரத்துக்கான வாக்கெடுப்பை நடத்துவதற்குத் தலைமை ஏற்க வேண்டும்.

இலங்கையின் ஆக்கிரமிப்புக்கு எதிராக ஈழத்தமிழ் மக்களையும் வடக்கு, கிழக்கு பிராந்தியத்தில் உள்ள அவர்களின் தாயகத்தின் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் நடவடிக்கையை இந்திய அரசு மேற்கொள்ளவேண்டும்.

அத்துடன் பொது வாக்கெடுப்பு நடத்தப்படும் வரை வடக்கு- கிழக்கு பகுதிகளை ஈழத்தமிழர்களே ஆளவும் ஐ.நா. இடைக்கால நிர்வாகம் வழிவகை செய்ய வேண்டும்.

சீனாவின் ஆதிக்கத்தைத் தடுக்க தனி ஈழமே தீர்வாகும். சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேசசமூகத்திலிருந்து இலங்கை பொருளாதார உதவியை நாடும் நிலையில் இலங்கைக்கு எந்த உதவியும் செய்யாமல் இருப்பதை உறுதி செய்யுமாறு, இந்திய அரசாங்கம் உட்பட சர்வதேச சமூகத்தை வலியுறுத்துகிறோம்- என்றார். (ஒ-இ)

### இராஜதந்திர...

இந்தக் கப்பல் இலங்கைக்கு வருவதை இந்தியா கடுமையாக ஆட்சேபித்திருந்த நிலையில், அதற்கு இணங்கிய இலங்கை அரசாங்கம், கப்பலின் வருகை தாமதப்படுத்துமாறு சீனாவிடம் கோரியிருந்தது. இந்தச் சூழலிலேயே குறித்த கப்பல் இலங்கையை நேற்று வந்தடையவில்லை.

'யுவான் வாங் 5' கப்பல் கடந்த மாதம் 14ஆம் திகதி சீனாவிலிருந்து புறப்பட்டது. அது நேற்றைய தினம் அம்பாந்தோட்டையை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்தக் கப்பலுக்கான உள்நுழையும் அனுமதி இலங்கை அரசாங்கத்தால் கடந்த மாதமே வழங்கப்பட்டிருந்தது.

இலங்கையில் சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கியுள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்தில் மேற்படி கப்பல் தரித்து நிற்பது தனது நாட்டின் பாதுகாப்புக்கு பாதிப்பு எனத் தெரிவித்து, கப்பல் இலங்கைக்கு வருவதற்கு இந்தியா இராஜதந்திரரீதியில் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

இதனையடுத்து கப்பலின் வருகையை தாமதப்படுத்துமாறு இலங்கை அரசாங்கம் சீனாவிடம் உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுத்திருந்தது. அதற்கு சீனா கடும் ஆட்சேபம் வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில், இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தை நேற்று வந்தடையவேண்டிய சீனக் கப்பல் நேற்று இரவு வரையில் அங்கு வரவில்லை. அம்பாந்தோட்டையிலிருந்து 600 கடல் மைல் தொலைவில் அந்தக் கப்பல் நிலைகொண்டுள்ளதுடன் அதன் பயணப் பாதையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் சீனக்கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருவதற்கான சாத்தியங்கள் குறைவு என்றும் கூறப்படுகின்றது. இது இந்தியாவின் கை, இந்த இராஜதந்திரச் சமரில் ஓங்கியிருப்பதைக் காட்டுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். (அ-ஒ.5)

### தாய்லாந்தில்...

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்று மாலை சிங்கப்பூரில் செலிடார் விமான நிலையத்திலிருந்து வாடகை விமானம் மூலமே, பாங்கொக் நேரப்படி இரவு 8 மணியளவில் டான் முயாங் விமான நிலையத்தைச் சென்றடைந்துள்ளார். (அ-ஒ.இ)

### வந்து சேர்ந்தது....

பனவுகள் நேற்றுமுன்தினம் செலுத்தப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். இந்த எரிபொருள் இருப்பு இன்று தரையிறக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-ஒ.இ)

### வடக்கே...

டன் கல்வி அமைச்சின் அதிகாரிகள், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவின் உபதலைவர், உறுப்பினர்கள் அடங்கிய குழுவினரே எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சிக்கும், 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

18 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் அமைக்கப்பட்டுள்ள மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதியின் வைபவ ரீதியான திறப்பு விழா இடம்பெறவுள்ளது. அரசாங்கத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 525 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதியைக் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த திறந்து வைக்கவுள்ளார்.

மறுநாள் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையத்திலும் கட்டடமொன்றைக் கல்வி அமைச்சர் திறந்து வைக்கவிருக்கிறார்.

அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர், ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர், பதிவாளர், நிதியாளர் மற்றும் பீடாதிபதிகளுடன் கலந்துரையாடவுள்ளனர். இதன்போது யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகக் கல்வியின் இன்றைய நிலை மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து இந்தக் குழுவினர் ஆராயவுள்ளனர். (அ-ஒ.5)

### நல்லைக்குமரன்...

அந்தவகையில் இவ்வாண்டு ஈழத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க, சமயக் குரவர்களின் பாடல் பெற்ற, சிவத்தலமான, திருக்கேதீச்சர ஆலய கும்பாபிஷேகப் பணிகளை ஆற்றி ஈழத்தில் சைவ சமய வளர்ச்சிக்கு துணை செய்து இறைபணி புரிந்த திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபையினர் யாழ். விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (அ-ஒ.20)

### மூன்று...

விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி, நிலையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகம் வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் மற்றும் மனித உரிமைகளின் பாதுகாப்பு - பேச்சு சுதந்திரம் மற்றும் எதிர்ப்பை வெளிப்படுத்துவது என்பவை தொடர்பிலும் அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பிலும் அதிருப்தியை ஜனாதிபதியிடம் அவர்கள் வெளியிட்டுள்ளனர். (அ-ஒ.இ)

### அள்ளிக்...

குடும்பங்களுக்கு உதவுவதற்காக 45 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலரை நிதியுதவியாக வழங்கியுள்ளனர்.

இந்தத் தொகை இலங்கையின் சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு யுனிசெப் மூலம் பகிர்ந்தளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட அவுஸ்திரேலிய அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையில் 2 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் மூன்று ரி-20 போட்டிகள் இடம்பெற்றிருந்தன.

அதன்போது, இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அவுஸ்திரேலியா அணி இலங்கைக்கான கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டமைக்கு இலங்கை ரசிகர்கள் நன்றி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் 10ஆம் நாளான நேற்று மஞ்சத் திருவிழா நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். (படம் ஐ.சிவசாந்தன்)

## கிராமத்திலிருக்கும் மாணவர்களை பேருந்துகள் ஏற்றிச் செல்வதில்லை

பெற்றோர் குற்றச்சாட்டு



கிளிநொச்சி, ஓக. 12

கிளிநொச்சி நகரப் பாடசாலைகளுக்கு, கிராமத்திலிருந்து வருகின்ற மாணவர்களை ஏ9 சாலையில் பயணிக்கின்ற பேருந்துகள் ஏற்றிச் செல்வதில்லை என்று பெற்றோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஆனையிறவு, உமையாள்புரம், திருமுறிகண்டி கிராமங்களிலிருந்து கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி புனித தெரேசா பெண்கள் கல்லூரி, பரந்தன் இந்து மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு வருகின்ற மாணவர்களைப் பேருந்துகள் விரைவாக ஏற்றுவதில்லை.

இதனால் நீண்ட நேரம் காத்திருந்தே பேருந்துகளில் பாடசாலை செல்லவேண்டிய நிலை உள்ளது என்று பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இயக்கச்சி, முகமாலை, இத்தாவில் ஆகிய பகுதிகளில் இருந்து பளை மத்திய கல்லூரிக்கு வருகின்ற மாணவர்களையும் பேருந்துகள் விரைவாக ஏற்றிச் செல்வதில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலகம், கரைச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேசங்களில் நடைபெற்ற கூட்டங்களில் தெரியப்படுத்தப்பட்டபோதும் அதற்கான நிரந்தரத் தீர்வுகள் எட்டப்படவில்லை என்று பெற்றோர் மேலும் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர். (ஓ-14-13)




## மூஞ்சூறு எலிகள் மூலம் சீனாவில் புதிய வைரஸ்

பீஜிங், ஓக. 12

சீனாவின் கிழக்குப் பகுதியில் விலங்குகள் மூலம் பரவுகின்ற புதிய வைரஸ் தொற்றுடன் இதுவரை 35 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என நிபுணர்களால் தெரிவிக்கப்படுகிறது. இந்த வைரஸ் மூஞ்சூறு எலிகள் மூலம் தொற்றியிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப் படுகிறது. 'லாங்யா ஹெனிப' வைரஸ் அல்லது சுருக்கமாக 'லேவ்'என்று இந்த வைரஸ் அழைக்கப்படுகின்றது.

எனினும் இன்னமும் 'லேவ்' மனிதர்களில் இருந்து மனிதருக்குப் பரவக்கூடியதா? என்பது உறுதிசெய்யப்படவில்லை என்று விஞ்ஞானிகளால் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைரஸ் ஏற்கனவே கண்டறியப்பட்ட கொடிய 'நிபா' மற்றும் 'ஹெண்ட்ரா' ஆகியவற்றின் குடும்பத்தைச் சேர்ந்தது என நிபுணர்கள் உறுதிசெய்துள்ளனர்.

தொற்றுக்குள்ளானவர்களில் பலர் விலங்குகளோடு நெருக்கமாக வசிக்கின்ற விவசாயிகள் என்றும் சோர்வு, இருமல், பசியின்மை போன்ற பொதுவான அறிகுறிகளும் இரத்த அணுக் குறைபாடு, கல்லீரல் மற்றும் சிறுநீரகப் பாதிப்பு போன்ற தீவிரமான அறிகுறிகளும் அவர் களி டையே அவதானிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## சாதா பாக்குடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 12

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குவேலிப் பகுதியில் சாதா பாக்குடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய்- சங்குவேலி பகுதியில் சுற்றுக்காவலில் ஈடுபட்டிருந்த மானிப்பாய் பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் நடமாடிய இருவரை சோதனையிட்டபோது அவர்களிடமிருந்து சாதா பாக்குப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

அவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு இளைஞர்களை கைது செய்து இருவருக்கு எதிராகவும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ-125)

**தேவை**

சாவகச்சேரி பெரிய அரசடி பகுதியில் ஆரம்பமாகும் தனியார் வைத்தியசாலைக்கு தாதிய பயிற்சி பெற்றவர்கள் (ஆண்.பெண்) தேவை.

தொடர்புகளுக்கு: 076 658 8555

**மணமகள் தேவை**

1981இல் பிறந்த உடுவிலைச் சேர்ந்த சுய தொழில் (வெல்டிங்) புரியும் பூரம், 1ம் பாதம் 14. பாவக்கிரகத்தை உடைய அழகிய மணமகனுக்கு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அழகிய மணமகள் தேவை.

074 020 6165, 077 029 4176

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

லயன் பொமனேறியன்

3 மாதம், தடுப்பூசி போடப்பட்ட நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

077 117 8618

## ரயில்வே திணைக்களத்துக்கு 9 நாள்களில் 16 மில். இழப்பு

கொழும்பு, ஓக.12

கடந்த வாரங்களில் பிரதான ரயில் சேவைகள் கைவிடப்பட்டதால், 9 நாள்களில் சுமார் 16 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆசனங்கள் முற்பதிவு செய்யப்படும் பதுளை - கொழும்பு ரயில்களும் இரத்து செய்யப் பட்டதால், நாளாந்தம் 2 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டதாகவும் திணைக்களம் குறிப் பிட்டுள்ளது. (ய)

## கொரோனாவால் நுரையீரல் சேதம்

ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலை மருத்துவர் கண்டுபிடிப்பு

இலங்கையில் தற்போது பரவிவரும் பி.ஏ4 மற்றும் பி.ஏ5 வகையான கொரோனா நுரையீரலை சேதப்படுத்துகின்றது என்று அமெரிக்கா ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் வளவாளர் மருத்துவர் சஞ்சய் பெரேரா தெரிவித்துள்ளார்.

அதன்படி குறித்த கொரோனத் தொற்றால் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தியுள்ளார்.

அத்துடன் நாட்டில் நேற்று மேலும் 214 பேர் கொரோனத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. இதேவேளை, ஐரோப்பா மற்றும் ஆபிரிக்காவிலும் இந்த வகைக் கொரோனாத் தொற்று மிக வேகமாகப் பரவி வருகின்றது என்றும் பல்கலை மருத்துவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-14-இ)

**வாடகைக்கு**

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 50 அடி அகலமும், 200 அடி நீளமும் கொண்ட 3 கடைகளும், யாழ் C.T.B பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக 12 அடி அகலமும், 60 அடி நீளமும் கொண்ட கடையும், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் யாழ் C.T.B பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக 30 அடி அகலமும், 100 அடி நீளமும் கொண்ட இரு கடைகளும், யாழ் மின்சார வீதியில் 16 அடி அகலமும், 60 அடி நீளமும் கொண்ட கடையும், யாழ் முனீஸ்வரன் வீதியில் சகல வசதியும் கொண்ட மாடிக்கடையும் உடன் வாடகைக்கு உண்டு

077 723 2535

**காணி விற்பனைக்கு**

யாழ் நாவற்குழியில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

பார்வை இடும் நேரம் :காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு

076 490 5403, 076 491 2493,076 490 6029



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.